*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.மனோகரன் த/பெ. பொன்னுசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.11.2025.**

துவக்க நேரம் 05.38 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கீரிப்பட்டியில் உள்ள முக்கோணம் என்ற கிராமத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமகோவிந்தனை தெரியும். அவரது மகளின் நிலத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர், எனது பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார்.

2) கடந்த 22.05.2022 ம் அன்று காலை 11.30 மணிக்குமேல் அலமேலு மற்றும் ராமகோவிந்தம் ஆகியோர்களுக்கிடையே நிலம் சம்மந்தமாக சண்டை நடந்தது. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதனை விசாரிப்பதற்காக காவல் நிலையத்திற்கு ராமகோவிந்தன், அலமேலு, அலமேலுவின் கணவர், நானும், அண்ணாமலை, சண்முகம் ஆகியோர்கள் அனைவரும் காவல் நிலையத்தில் உட்கார்ந்து நிலத்தகராறு சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தோம்.

3) அப்பொழுது அங்கு வந்த அருண் மற்றும் அன்பரசு ஆகிய இருவரும், காவல் நிலையத்திற்கு உள்ளேயே சேரை தூக்கிக்கொண்டு வந்து ராமகோவிந்தன் மற்றும் பைசல் பேசியவர்களை அடிக்க வந்தார்கள். உடனே

அங்கிருந்தவர்கள் சமாதானம் செய்து, பைசல் செய்து, நீதிமன்றத்திற்கு சென்று உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு எங்களை அனுப்பிவைத்தார்கள். நாங்களும் வந்துவிட்டோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கும், இவ்வழக்கு எதிரிக்கும் இடையே சிவில் வழக்குகள் நடைபெற்று வருகிறது என்று சொன்னால் சரிதான். சம்பவமானது, காவல் நிலையத்திற்குள்தான் நடந்தது என்று சொன்னால் சரியல்ல, தோட்டத்தில் தண்ணீர் எடுத்துவிட சென்றபொழுது நடைபெற்றது, அதுசம்மந்தமாக புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு வந்தோம், அங்கு வந்த எதிரி, காவல் நிலையத்திற்குள் அமர்ந்திருந்த ராமகோவிந்தனை சேரை தூக்கி அடிக்க சென்றார்.

2) சம்பவம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 22.05.2022 அன்று காலை 09.00–10.00 மணிக்கு நடந்தது. போலிசார், என்னை விசாரித்தபொழுது நான் எனது வாக்குமூலத்தில், 22.05.2022 அன்று பகல் 11.30 மணிக்கு காவல் நிலையத்திற்குள் வைத்து சம்பவம் நடத்தாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், அப்பொழுது உதவி ஆய்வாளர் உதயகுமார் இருந்தார்.

3) நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அதனால்தான் சம்பவம் காவல் நிலையத்திற்கு வெளியே நடந்ததாக எனது வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு, தற்பொழுது எனது முதல் விசாரணையில் சம்பவம் காவல் நிலையத்திற்குள்ளே நடந்ததாக முன்னுக்கு பின் முரணாக மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றும், எனக்கும், எதிரிக்கும் இடையே நடக்கும் சிவில் வழக்கு பிரச்சனை மனதில் கொண்டு, இவ்வழக்கில் எதிரிக்கெதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) எதிரிக்கும், எனக்கும் இடையே ஏற்கனவே தகராறு நடந்து, என் மீது புகார் கொடுத்து அதன் பேரில் ஜாமீனில் வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான், மேற்படி வழக்கு இந்த வழக்கிற்கு பின்பு என்மீது கொடுக்கப்பட்டுள்ளது. நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி, எதிரிக்கெதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் மீது கொடுத்த வழக்கினால், எதிரியின் மீது பகை கொண்டு இந்த வழக்கில் எதிரிக்கெதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் எங்கு, எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 05.59 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.13 19:34:46 +0530

Judicial Magistrate No.2, Attur.